# த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோபரேஷன் லிமிட்டெட்

**வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடன் ஹொங்கொங்கில் பதிவுசெய்யப்பட்டது.**

**HSBC ஹோல்டிங்ஸ் plc**

## ஒன்றிணைக்கப்பட்ட வருமானக் கூற்று

| டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கானது | 2015<br>US$m | 2014<br>US$m |
|---|---|---|
| வட்டி வருமானம் | **47,189** | 50,955 |
| வட்டிச் செலவு | **(14,658)** | (16,250) |
| **தேறிய வட்டி வருமானம்** | **32,531** | 34,705 |
| கட்டண வருமானம் | **18,016** | 19,545 |
| கட்டணச் செலவு | **(3,311)** | (3,588) |
| **தேறிய கட்டண வருமானம்** | **14,705** | 15,957 |
| வியாபார வருமானம் தவிர்ந்த தேறிய வட்டி வருமானம் | **6,948** | 4,853 |
| வியாபார நடவடிக்கை மீதான தேறிய வட்டி வருமானம் | **1,775** | 1,907 |
| **தேறிய வியாபார வருமானம்** | **8,723** | 6,760 |
| வழங்கப்பட்ட நீண்டகால கடன் மற்றும் சம்பந்தப்பட்ட மூல வளங்களின் சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | **863** | 508 |
| சந்தைப் பெறுமதிக்கு ஒதுக்கப்பட்ட ஏனைய நிதி பத்திரங்களிலிருந்தான நிகர வருமானம்/(செலவுகள்) | **669** | 1,965 |
| ஈடுபடுத்தப்பட்ட நிதி உபகரணங்களின் | | |
| சந்தைப் பெறுமதியிலிருந்தான தேறிய வருமானம் (செலவுகள்) | **1,532** | 2,473 |
| நிதி முதலீடுகளில் இருந்தான நட்டம் | **2,068** | 1,335 |
| பங்கு இலாப வருமானம் | **123** | 311 |
| நிகர காப்புறுதி கட்டுப்பன வருமானம் | **10,355** | 11,921 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | **1,055** | 1,131 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **71,092** | 74,593 |
| செலுத்தப்பட்ட நிகர காப்புறுதிக் கோரிக்கைகள் மற்றும் அனுகூலங்களும் காப்புறுதிப் பத்திர உரிமையாளர்களுக்கான பொறுப்புகளின் மாற்றமும் | **(11,292)** | (13,345) |
| **கடன் பதிவழிப்பும் ஐயக்கடன் ஏற்பாடுகளுக்கும் முந்திய தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **59,800** | 61,248 |
| கடன் பதிவழிப்பும் ஐயக்கடன் ஏற்பாடுகளும் | **(3,721)** | (3,851) |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **56,079** | 57,397 |
| ஊழியர் நட்டஈடுகளும் நன்மைகளும் | **(19,900)** | (20,366) |
| பொது நிர்வாகச் செலவுகள் | **(17,662)** | (18,565) |
| உடமைகள், நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு | **(1,269)** | (1,382) |
| கட்புலனாகாச் சொத்துக் குறைப்பு | **(937)** | (936) |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவு** | **(39,768)** | (41,249) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | **16,311** | 16,148 |
| கூட்டு இணைப்பு கூட்டு முயற்சிகளுக்கான இலாபப்பங்கு | **2,556** | 2,532 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | **18,867** | 18,680 |
| வரிச் செலவுகள் | **(3,771)** | (3,975) |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | **15,096** | 14,705 |
| தாய்க்கம்பனி பங்குதாரர்களுக்கு சுமத்தப்பட்ட இலாபம் | **13,522** | 13,688 |
| சிறுபான்மை அக்கறையாளர்களுக்கு சுமத்தப்பட்ட இலாபம் | **1,574** | 1,017 |
| | US $ | US $ |
| சாதாரண பங்கொன்றின் அடிப்படைச் சம்பாத்தியம் | 0.65 | 0.69 |
| சாதாரண பங்கொன்றின் ஐதாக்கிய சம்பாத்தியம் | 0.64 | 0.69 |

## விரிவான வருமானத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கை

| டிசெம்பர் 31இல் முடிவடைந்த | 2015<br>US$m | 2014<br>US$m |
|---|---|---|
| ஆண்டிற்கான இலாபம் | **15,096** | 14,705 |
| **ஏனைய விரிவான வருமானம்/(செலவு)** | | |
| குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் அனுசரிக்கப்பட்டதும், இலாபமாக அல்லது நட்டமாக பின்னர் மீள வகைப்படுத்தப்படும் விடயங்கள், | **(3,072)** | 2,972 |
| – வருமான அறிக்கைக்கு மீள் வகைப்படுத்தப்பட்ட நியாயப் பெறுமதி அதாயங்கள் | **(1,231)** | 4,794 |
| – சீரிழப்புக்கள் தொடர்பில் வருமான அறிக்கைக்கு மீள் வகைப்படுத்தப்பட்ட தொகைகள் | **(2,437)** | (1,672) |
| – சேத இழப்புகள் தொடர்பில் வருமான அறிக்கைக்கு மாற்றப்பட்ட தொகைகள் | **127** | 374 |
| – வருமான வரிகள் | **469** | (524) |
| காசுப் பாய்ச்சல் இடர் காப்புக்கள் | **(24)** | 188 |
| – நியாயப் பெறுமதி அதிகரிப்புக்கள்/(இழப்புகள்) | **704** | 1,512 |
| – வருமான அறிக்கைக்கு மீள் வகைப்படுத்தப்பட்ட நியாயப் பெறுமதி ஆதாயங்கள் | **(705)** | (1,244) |
| – வருமான வரிகள் | **(23)** | (80) |
| இலாபமாக அல்லது நட்டமாக பின்னர் மீள வகைப்படுத்தப்படாத விடயங்கள்: | | |
| நிர்ணயிக்கப்பட்ட சொத்து / பொறுப்பு அனுகூலங்களின் மீள் மதிப்பீடு | **(9)** | 80 |
| – வருமான வரிகளுக்கு முன் | **(9)** | 78 |
| – வருமான வரிகள் | **–** | 2 |
| துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளின் விரிவான வருமானத்தின்/(செலவின்) பங்கு | **(10,945)** | (8,903) |
| – ஆண்டிற்கான பங்கு | **–** | (21) |
| – விற்பனை மூலம் வருமான அறிக்கைக்கு மீள்வகைப்படுத்தியது | **(11,112)** | (8,917) |
| பரிவர்த்தனை வித்தியாசங்கள் | **167** | 35 |
| – வெளிநாட்டுச் செயற்பாடுகளின் விற்பனை மூலம் வருமான அறிக்கைக்கு மீள்வகைப்படுத்திய வெளிநாட்டு நாணய மாற்று ஆதாயம் | **101** | 1,985 |
| – ஏனைய பரிவர்த்தனை வித்தியாசங்கள் | **130** | 2,419 |
| பரிவர்த்தனை வித்தியாசங்களுக்குச் சாட்டத்தக்க வருமான வரி | **(29)** | (434) |
| வரி நீங்கலாக, வருடத்தின் ஏனைய விரிவான வருமானம் | **(13,949)** | (3,678) |
| வருடத்தின் மொத்த விரிவான வருமானம் | **1,147** | 11,027 |
| **வருடத்தின் மொத்த விரிவான வருமானத்தில்** | | |
| – தாய் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்குச் சாட்டத்தக்கது | **460** | 9,245 |
| – கட்டுப்பாட்டு உரிமையற்ற தரப்பினருக்குச் சாட்டத்தக்கது | **687** | 1,782 |
| **ஆண்டிற்கான மொத்த அனைத்துள்ளடங்கிய வருமானம்** | **1,147** | 11,027 |

## ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்

| டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கானது | 2015<br>US$m | 2014<br>US$m |
|---|---|---|
| மொத்தக் கடன்களும் பெறத்தக்கவைகளும் | **934,009** | 986,997 |
| (கழிக்குக): தனித்தனி சீரிழப்பு | **(5,402)** | (6,195) |
| ஒட்டுமொத்த சீரிழப்பு | **(4,153)** | (6,142) |
| இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் நிர்ணயிக்கப்பட்டவை உட்பட நிகர கடன்களும் பெறத்தக்கவைகளும் | **924,454** | 974,660 |
| (கழிக்குக): இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் நிர்ணயிக்கப்பட்ட நிகர கடன்களும் பெறத்தக்கவைகளும் | – | – |
| **நிகர கடன்களும் பெறத்தக்கவைகளும்** | **924,454** | 974,660 |

## ஆண்டிற்கான காசுப் பாய்ச்சலின் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கை

| டிசெம்பர் 31இல் முடிவடைந்த | 2015<br>US$m | 2014<br>US$m |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| வரிக்கு முந்திய இலாபம் | **18,867** | 18,680 |
| பின்வருவனவற்றிற்கான சீராக்கல்கள்: | | |
| - முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர வருமானம் | **(1,935)** | (1,928) |
| - துணை மற்றும் கூட்டு நிறுவனங்களின் இலாபப் பங்கு | **(2,556)** | (2,532) |
| - இணை நிறுவனங்கள், கூட்டு முயற்சிகள், உப நிறுவனங்கள் மற்றும் வியாபாரங்களின் விற்பனை மூலம் (ஆதாயம்) / இழப்பு | **–** | 9 |
| - வரிக்கு முந்திய இலாபத்தில் அடங்கும் ஏனைய காசு அல்லாத விடயங்கள | **10,765** | 11,262 |
| - செயற்படு சொத்துக்களில் மாற்றம் | **65,828** | 25,877 |
| - செயற்படு பொறுப்புக்களில் மாற்றம் | **(106,762)** | (93,814) |
| - பரிவர்த்தனை வித்தியாசங்களின் தவிர்ப்பு | **18,308** | 24,571 |
| - துணை நிறுவனங்களிலிருந்து கிடைத்த பங்கிலாபம் | **879** | 757 |
| - நிர்ணயித்த அனுகூலத் திட்டங்களுக்குச் செலுத்தப்பட்ட பங்களிப்பு | **(664)** | (681) |
| - செலுத்தப்பட்ட வரிகள் | **(3,852)** | (3,573) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் (பாவிக்கப்பட்ட) / உருவாக்கப்பட்ட நிகர காசு | **(1,122)** | (21,372) |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| நிதி முதலீடுகளின் கொள்வனவு | **(438,376)** | (384,199) |
| நிதி முதலீடுகளின் விற்பனை மற்றும் முதிர்ச்சி மூலம் பெற்ற வருமானம் | **399,636** | 382,837 |
| ஆதனம், இயந்திரம், உபகரணங்களின் கொள்வனவு | **(1,352)** | (1,477) |
| ஆதனம், இயந்திரம், உபகரணங்களின் விற்பனை மூலம் பெற்ற வருமானம் கடன் தொகுதிகளின் விற்பனை மூலம் பெற்ற வருமானம் | **103** | 88 |
| வாடிக்கையாளர் மற்றும் கடன் திட்டங்களின் விற்பனை மூலம் நிகர காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | **2,023** | (1,035) |
| **Proceeds from disposal of Ping An** | **(954)** | (903) |
| ஏனைய உப நிறுவனங்கள், வியாபாரங்கள், இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளின் விற்பனை மூலம் நிகர காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்) | **–** | – |
| முதலீட்டு நடவடிக்கைகளில் உருவாக்கப்பட்ட/(பாவிக்கப்பட்ட) நிகர காசு | **8** | (272) |
| | **(38,912)** | (4,961) |
| **நிதியளிப்பு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| சாதாரண பங்கு மூலதனத்தின் வழங்கல் | **147** | 267 |
| சந்தை ஆக்கத்திற்காகவும் முதலீட்டு நோக்கத்திற்காகவும் சொந்தப் பங்குகளின் நிகர விற்பனை/(கொள்வனவு) | **331** | (96) |
| ஏனைய உரிமைப்பங்கு ஒப்பந்தங்களின் வழங்கல் | **3,580** | 5,681 |
| முன்னுரிமைப் பங்குகளின் மீட்பு | **(463)** | (234) |
| வழங்கப்பட்ட கீழ்நிலைப்படுத்திய கடன் மூலதனம் | **3,180** | 3,500 |
| மீளளிக்கப்பட்ட கீழ்நிலைப்படுத்திய கடன் மூலதனம் | **(2,157)** | (3,163) |
| தாய் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட பங்கிலாபம் | **(6,548)** | (6,611) |
| கட்டுப்பாட்டைக் கொண்டிராத அக்கறையுள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட பங்கிலாபம் | **(697)** | (639) |
| ஏனைய பங்குரிமை ஆவணங்களை வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்ட பங்கிலாபம் | **(950)** | (573) |
| நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிகர காசு | **(3,577)** | (1,868) |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் நிகர அதிகரிப்பு/(வீழ்ச்சி)** | **(43,611)** | (28,201) |
| ஜனவரி 1இல் இருந்தவாறு, காசு மற்றும் காசுக்குச் சமமானவை | **301,301** | 346,281 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை தொடர்பில் பரிவர்த்தனை வித்தியாசங்கள் | **(13,827)** | (16,779) |
| டிசெம்பர் 31இல் இருந்தவாறு, காசு மற்றும் காசுக்குச் சமமானவை | **243,863** | 301,301 |

## ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் காலப்பகுதியில் தனித்தனி மற்றும் ஒட்டுமொத்த சீரிழப்புக்களின் மாற்றங்கள்

| டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கானது | 2015<br>US$m | 2014<br>US$m |
|---|---|---|
| **தனித்தனி சீரிழப்பு** | | |
| ஆரம்ப மீதி | **6,195** | 7,072 |
| வருமான அறிக்கைக்கான சேர்ப்பு | **1,516** | 1,776 |
| ஆண்டு காலப்பகுதியில் பதிவழிப்பு | **(1,368)** | (2,313) |
| முன்பு பதிவழிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணத் தொகைகளின் மீட்பு | **86** | 114 |
| பரிவர்த்தனை மற்றும் ஏனைய மாற்றங்கள் | **(1,027)** | (454) |
| **முடிவு மீதி** | **5,402** | 6,195 |
| **ஒட்டுமொத்த சீரிழப்பு** | | |
| ஆரம்ப மீதி | **6,142** | 8,071 |
| வருமான அறிக்கைக்கான அறவீடு (மீளெழுத்து) | **2,087** | 2,275 |
| ஆண்டு காலப்பகுதியில் பதிவழிப்பு | **(2,826)** | (4,060) |
| ஏனைய மாற்றங்கள் (மீட்புக்கள்) | **722** | 841 |
| பரிவர்த்தனை மற்றும் ஏனைய மாற்றங்கள் | **(1,972)** | (985) |
| **முடிவு மீதி** | **4,153** | 6,142 |
| **மொத்த சீரிழப்பு** | **9,555** | 12,337 |

## ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் - துறைசார் விபரம்

| டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கானது | 2015<br>US$m | 2014<br>US$m |
|---|---|---|
| **தனிப்பட்டவை** | **374,082** | 393,554 |
| முதலாவது பாத்திய வசிப்பிட அடைமானங்கள் | **274,511** | 286,524 |
| ஏனைய தனிப்பட்டவை | **99,571** | 107,030 |
| **நிறுவனங்களும் வணிகமும் சார்ந்தவை** | **499,513** | 542,625 |
| உற்பத்தித் துறை | **95,858** | 106,986 |
| சர்வதேச வர்த்தகம் மற்றும் சேவைகள் | **159,019** | 180,791 |
| வணிக காணி ஆதனம் | **67,926** | 73,293 |
| ஏனைய சொத்து தொடர்புடையவை | **53,464** | 52,387 |
| அரசாங்கம் | **7,455** | 6,143 |
| ஏனைய வணிகத் துறை | **115,791** | 123,025 |
| **நிதி சார்ந்தவை** | **60,414** | 50,818 |
| வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் | **60,414** | 50,818 |
| **உப மொத்தம்** | **934,009** | 986,997 |

## ஒன்றிணைக்கப்பட்ட ஐந்தொகை

| டிசெம்பர் 31இல் உள்ளவாறானது | 2015<br>US.$m | 2014<br>US$m |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| கையிலுள்ள காசும் மத்திய வங்கியின் நிலுவைகளும் | **98,934** | 129,957 |
| ஏனைய வங்கிகளிடமிருந்தான வருமதிகள் | **5,768** | 4,927 |
| ஹொங்கொங் அரசபிணைப் பத்திரங்களின் கடன்முறி | **28,410** | 27,674 |
| வியாபாரச் சொத்துக்கள் | **224,837** | 304,193 |
| ஈடுபடுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களின சந்தைப் பெறுமதி | **23,852** | 29,037 |
| மூலத்திலிருந்து பெற்றவை | **288,476** | 345,008 |
| வங்கிகளுக்கான கடனும் முற்பணங்களும் | **90,401** | 112,149 |
| வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் | **924,454** | 974,660 |
| நேர்மாற்ற மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் - வர்த்தகம் சாராதவை | **146,255** | 161,713 |
| நிதி முதலீடுகள் | **428,955** | 415,467 |
| விற்பனைக்கான சொத்துக்கள் | **43,900** | 7,647 |
| முன்கொடுப்பனவுகள், திரண்ட வருமானம் மற்றும் ஏனைய சொத்துக்கள் | **54,398** | 67,529 |
| தற்போதைய வரிவிதிப்புச் சொத்துக்கள் | **1,221** | 1,309 |
| கூட்டு இணைப்பு கூட்டு முயற்சியில் இருந்தான வட்டி | **19,139** | 18,181 |
| நன்மதிப்பும் கட்புலனாகச் சொத்துக்களும் | **24,605** | 27,577 |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்புச் சொத்துக்கள் | **6,051** | 7,111 |
| **மொத்தச் சொத்துக்கள் டிசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | **2,409,656** | 2,634,139 |
| **பொறுப்புக்களும் உரிமையாண்மையும் பொறுப்புக்கள்** | | |
| **பொறுப்புக்கள்** | | |
| சுற்றோட்டத்திலுள்ள ஹொங்கொங் தாள் நாணயங்கள் | **28,410** | 27,674 |
| வங்கி வைப்புக்கள் | **54,371** | 77,426 |
| வாடிக்கையாளர் கணக்குகள் | **1,289,586** | 1,350,642 |
| மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் - வர்த்தகம் சாராதவை | **80,400** | 107,432 |
| ஏனைய வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் | **5,638** | 5,990 |
| வியாபாரப் பொறுப்புக்கள் | **141,614** | 190,572 |
| சந்தைப் பெறுமதியிலான நிதிப் பொறுப்புக்கள் | **66,408** | 76,153 |
| மூலத்திலிருந்து பெற்றவை | **281,071** | 340,669 |
| வழங்கப்பட்ட பாதுகாப்புக் கடன்கள் | **88,949** | 95,947 |
| கைதீர்ப்புக் குழுக்களின் விற்பனைக்கான பொறுப்புக்கள் | **36,840** | 6.934 |
| திரள்வுகள், ஒத்திவைக்கப்பட்ட வருமானம் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | **38,116** | 46,462 |
| தற்போதைய வரிவிதிப்புப் பொறுப்புக்கள் | **783** | 1,213 |
| காப்புறுதி ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்ட பொறுப்புக்கள் | **69,938** | 73,861 |
| ஏற்பாடுகள் | **5,552** | 4,998 |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்புச் பொறுப்புக்கள் | **1,760** | 1,524 |
| இரண்டாந்தரப் பொறுப்புக்கள் | **22,702** | 26,664 |
| **மொத்தப் பொறுப்புக்கள் டிசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | **2,212,138** | 2,434,161 |
| **உரிமையாண்மை** | | |
| அழைப்புப்பங்கு மூலதனம் | **9,842** | 9,609 |
| பங்கு வட்டக் கணக்கு | **12,421** | 11,918 |
| ஏனைய உரிமையாண்மை பத்திரங்கள் | **15,112** | 11,532 |
| ஏனைய ஒதுக்கங்கள் | **7,109** | 20,244 |
| நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்கள் | **143,976** | 137,144 |
| மொத்தப் பங்குதாரர்களின் உரிமையாண்மை | **188,460** | 190,447 |
| கட்டுப்பாடற்ற வட்டி | **9,058** | 9,531 |
| **மொத்த உரிமையாண்மை** | **197,518** | 199,978 |
| **டிசெம்பர் 31இல் மொத்தப் பொறுப்புகளும் உரிமைப்பங்கும்** | **2,409,656** | 2,634,139 |

## ஏனைய வாடிக்கையாளர்களுக்குரியவை - துறைசார் விபரம்

| டிசெம்பர் 31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கானது | 2015<br>US$m | 2014<br>US$m |
|---|---|---|
| நுகர்வு வங்கிச் சேவை மற்றும் செல்வ முகாமை | **584,872** | 583,757 |
| வணிக வங்கிச் சேவை | **361,701** | 361,318 |
| உலகளாவிய வங்கிச் சேவை மற்றும் சந்தைகள் | **261,728** | 319,121 |
| உலகளாவிய தனியார் வங்கிச் சேவை | **80,404** | 85,465 |
| ஏனையவை | **881** | 981 |
| **மொத்தம்** | **1,289,586** | 1,350,642 |

| **குழு செயற்பாட்டு விகிதம் ( % )** | **2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு** | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|
| படி 1 மூலதனம் | **13.9** | 12.5 |
| மொத்த மூலதனம் | **17.2** | 15.6 |
| சராசரி நிறையேற்றிய சொத்துக்களிலிருந்து வரிக்கு முந்திய வருமானம் | **1.6** | 1.5 |
| சராசரி சாதாரண பங்குதாரர் பங்குரிமையிலிருந்து வருமானம் | **7.2** | 7.3 |

*2015 ஜனவரி 01 தொடக்கம் CRD IV நடைமுறைக்கு வந்ததால், 2015 டிசெம்பர் 31இல் இருந்தவாறான மூலதன வளங்கள் மற்றும் இடர் நிறையேற்றிய சொத்துக்கள் அதன் அடிப்படையில் கணிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

## 31.12.2015 இல் முடிவடைந்த வருடத்திற்கான திரண்ட உரிமையாண்மை மாற்றுக்கூற்று

| | | | | | வேறு ஒதுக்கங்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அழைக்கப்பட்ட பங்கு மூலதனம் US$m | பங்கு வட்டம் US$m | வேறு உரிமையாண்மை சாதனங்கள் US$m | எஞ்சிய உழைத்த இலாபசீர் US$m | விற்பனைக்கு கிடைக்கப் பெறும் பெறுமதி ஒதுக்கம் US$m | காசுப்பாய்ச்சல் நட்டங்களிற்கெதிரான ஒதுக்கம் US$m | அந்நிய செலாணி ஒதுக்கம் US$m | இணைப்பு ஒதுக்கம் US$m | மொத்தப் பங்குகளின் உரிமையாண்மை US$m | கட்டுப்பாட்டிற்கு புறம்பான அக்கறை US$m | மொத்த உரிமையாண்மை US$m |
| **2015 ஜனவரி 01 இல் உள்ளவாறு** | 9,609 | 11,918 | 11,532 | 137,144 | 2,143 | 58 | (9,265) | 27,308 | 190,447 | 9,531 | 199,978 |
| ஆண்டுக்கான இலாபம் | – | – | – | 13,522 | – | – | – | – | 13,522 | 1,574 | 15,096 |
| வேறு பரந்த வருமானம் (வரி கழித்து தேறியது) | – | – | – | 73 | (2,332) | (24) | (10,779) | – | (13,062) | (887) | (13,949) |
| - விற்பனைக்கு கிடைக்கப் பெறும் முதலீடுகள் | – | – | – | – | (2,332) | – | – | – | (2,332) | (740) | (3,072) |
| - நட்டத்திற்கெதிரான காசுப் பாய்ச்சல் | – | – | – | – | – | (24) | – | – | (24) | – | (24) |
| - நிர்ணயிக்கப்பட்ட சொத்து / பொறுப்பு அனுகூலங்களின் மீள் மதிப்பீடு | – | – | – | 82 | – | – | – | – | 82 | 19 | 101 |
| - பங்காளர் நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களின் வேறுபரந்த வருமானத்தின் பங்கு | – | – | – | (9) | – | – | – | – | (9) | – | (9) |
| - மாற்றீடுகளின் வேறுபாடு | – | – | – | – | – | – | (10,779) | – | (10,779) | (166) | (10,945) |
| ஆண்டுக்கான மொத்த பரந்த வருமானம் | – | – | – | 13,595 | (2,332) | (24) | (10,779) | – | 460 | 687 | 1,147 |
| ஊழியர் பங்கு வழங்கல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பங்குகள் | 45 | 691 | – | (589) | – | – | – | – | 147 | – | 147 |
| பங்கு இலாபத்தினதும், அதிலிருந்து தோன்றும் தொகைக்கும் பதிலாக வழங்கப்பட்ட பங்குகள் | 188 | (188) | – | 3,162 | – | – | – | – | 3,162 | – | 3,162 |
| வழங்கப்பட்ட மூலதன பிணையங்கள் | – | – | 3,580 | – | – | – | – | – | 3,580 | – | 3,580 |
| பங்குதாரர்களுக்கான பங்கு இலாபம் | – | – | – | (10,660) | – | – | – | – | (10,660) | (697) | (11,357) |
| பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஏற்பாடுகளுக்குரிய மதிப்பீடு | – | – | – | 757 | – | – | – | – | 757 | – | 757 |
| வேறு அசைவுகள் | – | – | – | 567 | – | – | – | – | 567 | (463) | 104 |
| **2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **9,842** | **12,421** | **15,112** | **143,976** | **(189)** | **34** | **(20,044)** | **27,308** | **188,460** | **9,058** | **197,518** |

மேலுள்ள நிதித் தகவல்களின் சுருக்கம் 2015 டிசெம்பர் 31இல் முடிவடைந்த வருடத்திற்கான HSBC ஹோலிடிங்ஸ் பிஎல்சியின் ஆண்டறிக்கையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகும்.

## நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அளவீட்டு முறையிலான பகுப்பாய்வு 2015 டிசெம்பர் 31இல் இருந்தவாறு

| | வர்த்தகத்திற்கு வைத்திருக்கும் பிணையங்கள் மில். அ.டொ. | நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட மில். அ.டொ. | முதிர்ச்சி வரை வைத்திருக்கும் பிணையங்கள் மில். அ.டொ. | விற்பனைக்குள்ள பிணையங்கள் மில். அ.டொ. | தேய்மானப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மில். அ.டொ. | ஹெஜிங் சாதனங்களாக நியமிக்கப்பட்ட பெறுதிகள் மில். அ.டொ. | மொத்தம் மில். அ.டொ. |
|---|---|---|---|---|---|---|---|
| **நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| மத்திய வங்கியிலுள்ள காசு மற்றும் மீதிகள; | – | – | – | – | 98,934 | – | 98,934 |
| ஏனைய வங்கிகளிலிருந்து சேகரிக்கப்படும் உருப்படிகள் | – | – | – | – | 5,768 | – | 5,768 |
| ஹொங்கொங் அரசின் கடன்படுகைச் சான்றிதழ்கள் | – | – | – | – | 28,410 | – | 28,410 |
| வர்த்தகச் சொத்துக்கள் | 224,837 | – | – | – | – | – | 224,837 |
| நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் | – | 23,852 | – | – | – | – | 23,852 |
| பெறுதிகள் | 285,678 | – | – | – | – | 2,798 | 288,476 |
| வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணம் | – | – | – | – | 90,401 | – | 90,401 |
| வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணம் | – | – | – | – | 924,454 | – | 924,454 |
| நேர்மாற்ற மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் - வர்த்தகமற்றவை | – | – | – | – | 146,255 | – | 146,255 |
| நிதி முதலீடுகள் | – | – | 44,102 | 384,853 | – | – | 428,955 |
| திரண்ட வருமானம் மற்றும் ஏனைய நிதிச் சொத்துக்கள் | – | – | – | – | 149,314 | – | 149,314 |
| | **510,515** | **23,852** | **44,102** | **384,853** | **1,443,536** | **2,798** | **2,409,656** |
| **நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| புழக்கத்திலுள்ள ஹொங்கொங் நாணயத் தாள்கள் | – | – | – | – | 28,410 | – | 28,410 |
| வங்கிகளின் வைப்புக்கள் | – | – | – | – | 54,371 | – | 54,371 |
| வாடிக்கையாளர் கணக்குகள் | – | – | – | – | 1,289,586 | – | 1,289,586 |
| மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் - வர்த்தகமற்றவை | – | – | – | – | 80,400 | – | 80,400 |
| ஏனைய வங்கிகளுக்கு அனுப்பீடு செய்யப்படும் உருப்படிகள் | – | – | – | – | 5,638 | – | 5,638 |
| வர்த்தகப் பொறுப்புக்கள் | 141,614 | – | – | – | – | – | 141,614 |
| நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதிப் பொறுப்புக்கள் | – | 66,408 | – | – | – | – | 66,408 |
| பெறுதிகள் | 276,558 | – | – | – | – | 4,513 | 281,071 |
| வழங்கலிலுள்ள கடன் பிணையங்கள் | – | – | – | – | 88,949 | – | 88,949 |
| திரண்ட மற்றும் ஏனைய நிதிப் பொளுப்புக்கள் | – | – | – | – | 152,989 | – | 152,989 |
| கீழ்நிலைப்படுத்திய பொறுப்புக்கள் | – | – | – | – | 22,702 | – | 22,702 |
| | **418,172** | **66,408** | **–** | **–** | **1,723,045** | **4,513** | **2,212,138** |

# HSBC ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. நிறுவன ஆளுகை அறிக்கையின் சுருக்கம் 2015

**கீழே தரப்பட்டுள்ள தகவல்களும் எடுத்துக்காட்டாக இணைக்கப்பட்டுள்ள தகவல்களும் HSBC ஹோல்டிங்ஸ் பி.எல்.சி.யின் ("HSBC")** 2015ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகளின் ("ஆண்டறிக்கை") **249 முதல் 280 வரையான பக்கங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள நிறுவன ஆளுகை அறிக்கையின் சுருக்கமாகும்.**

### பணிப்பாளர்கள் சபை

கம்பனியின் நீண்டகால வெற்றியை ஊக்குவிப்பதும் பங்குதாரர்களுக்கு நிலைபெறுதகு பெறுமதியை வழங்குவதும் HSBC ஹோல்டிங்ஸ் பணிப்பாளர்கள் சபையின் ("சபை") நோக்கமாகும். குழுமத் தவிசாளரின் தலைமையிலான இச் சபை, குழுமத்தின் மூலோபாயங்கள் மற்றும் இடர்காப்புத் தேவைகளை நிர்ணயிப்பதுடன், அந்த மூலோபாய இலக்குகளை அடைவதற்கு முகாமைத்துவத்தினால் சமர்ப்பிக்கப்படும் செயற்பாட்டுத் திட்டங்களையும் மூலதன ஒதுக்கீட்டையும் அங்கீகரிக்கின்றது. மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

### சபையின் அதிகாரங்கள்

உலகளாவிய ரீதியில் HSBCஇன் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்வது சபையின் பொறுப்பாகும். சபை இப் பணியை மேற்கொள்ளும்போது, ஏதேனும் பொருத்தமான சட்டங்கள், பிரமாணங்கள் நிறுவனத்தின் கூட்டிணைப்பு விதிகள் என்பவற்றிற்கு அமைவாக தனது அதிகாரங்களைப் பிரயோகிக்க முடியும். சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாட்டு விதிமுறைகளை www.hsbc.com/1/2/about/board-of-directors என்ற இணையத்தளத்தில் பார்க்கலாம். இவ் விதிமுறைகள் சபையினால் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றன.

### குழுமத்தின் முகாமைத்துவச் சபை (GMB)

குழும முகாமைத்துவச் சபைக்கு குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தலைமை தாங்குகிறார். சபைப் பணிப்பாளர்களினால் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க, HSBC ஹோல்டிங்ஸ் மற்றும் அதன் உப நிறுவனங்களின் அன்றாடச் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கு உதவியாக குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்குப் பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவது இந்த முகாமைத்துவச் சபையின் பொறுப்பாகும்.

குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியினால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பேரில் செயற்படும் குழுமத்தின் பிரதம இடர் முகாமைத்துவ அலுவலர், GMB கிரமமாக நடத்தும் இடர் முகாமைத்துவக் கூட்டங்களுக்கு (RMM) தலைமை தாங்குவார். இக் கூட்டங்களில், சகல இடர்களினதும் நிறுவன ரீதியான முகாமைத்துவத்திற்கு மூலோபாய வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையை வழங்குதல், குழுமத்தின் இடர் முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வகுத்து, அவற்றைத் தொடர்ச்சியாகப் பேணி, காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல் ஆகிய அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.

### குழுத்தின் கணக்காய்வுக் குழு (GAC)

நிதி அறிக்கைகளின் நேர்மையைத் தன்மையைக் கண்காணித்தல், நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை மேற்பார்வை செய்தல், உலகளாவிய உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டின் வினைத்திறனைக் கண்காணித்து மீளாய்வு செய்தல் என்பவற்றிற்குக் குழுமத்தின் கணக்காய்வுக் குழு பொறுப்பாக இருக்கிறது. அது தனது பணிகளின் ஒரு பகுதியாக நிறுவனத்தின் நிதியியல் மற்றும் கணக்கியல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மீளாய்வு செய்தல், வெளியிட கணக்காய்வாளரின் மேற்பார்வை மற்றும் ஊதியம், வெளியிடக் கணக்காய்வாளரின் நியமனம் தொடர்பில் சபைக்குப் பரிந்துரை வழங்குதல், மீட்பு மற்றும் தீர்வுத் திட்டமிடலுக்கான நடவடிக்கைகளை முகாமைத்துவத்துடன் மீளாய்வு செய்தல் ஆகிய அலுவல்களை இக் குழு தனது பணிகளின் ஒரு பகுதியாக மேற்கொள்கிறது.

### குழுமத்தின் இடர்காப்புக் குழு (GRC)

உயர் மட்டத்திலான இடர்கள் தொடர்பான விடயங்களிலும் தற்போதய மற்றும் எதிர்கால இடர் வாய்ப்புக்கள், குழுமத்தின் எதிர்கால இடர்சார் மூலோபாயம் மற்றும் இடர் முகாமைத்தும் உள்ளடங்கலான இடர் நிர்வாகம் தொடர்பிலும் சபைக்கு ஆலோசனை வழங்குதல் இக் குழுவின் பொறுப்பாகும். இடர் வாய்ப்பு மற்றும் இடர்களைத் தாங்கிக்கொள்ளுதல், குழுமத்தின் இடர் முகாமைத்துவ அமைப்பு முறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் (GACயின் பொறுப்பிலுள்ள உள்ளக நிதிக் கட்டுப்பாடுகள் தவிர), அதி முக்கியமான மற்றும் உருவாகிவரும் இடர்கள் உள்ளிட்ட இடர்களின் நிறைவேற்று ரீதியான கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவத்தைக் கண்காணித்தல் என்பன தொடர்பாக சபைக்கு ஆலோசனை வழங்குதல், இடர் வாய்ப்புக்களை ஊதியக் கொடுப்பனவுகளை இணைப்பது சம்பந்தமாக குழும ஊதியக் குழுவுக்கு ஆலோசனை வழங்குதல் ஆகிய அலுவல்களை இக் குழு மேற்கொள்கிறது.

### ஊதியம் தொடர்பான குழு

குழுமத்தின் ஊதியக் கொள்கை தொடர்பான ஒட்டுமொத்தக் கோட்பாடுகள், அளவுகோல்கள் மற்றும் ஆளுகைக் கட்டுக்கோப்பு என்பவற்றையும் நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய சிரேஷ்ட குழும அலுவலர்களின் ஊதியங்களையும் நிர்ணயித்தல் இக் குழுவின் பொறுப்பாகும்.

இக் குழு தனது பணியை மேற்கொள்ளும்போது, நிறுவனம் மற்றும் அதன் உப நிறுவனங்களின் ஊதியக் கொள்கையின் செயற்திறனை, தொடர்ச்சியான மற்றும் பயன்நிறைவான இடர் முகாமைத்துவத்தின் அடிப்படையில் கிரமமாக மீளாய்வு செய்கிறது. எந்தவொரு பணிப்பாளரும் தனது சொந்த ஊதியத்தைத் தீர்மானிக்கும் விடயத்தில் சம்பந்தப்படுவதில்லை.

### நியமனக் குழு

சபையின் கட்டமைப்பு, அளவு மற்றும் அதில் இடம்பெறுபவர்களின் திறன்கள், அறிவு, அனுபவம், பல்வகைத் தன்மை என்பவற்றை இக் குழு கிரமமாக மீளாய்வு செய்கிறது. சபை நியமனச் செயற்பாட்டிற்கு வழிகாட்டுவதிலும் சபை நியமனத்திற்கான ஆட்களை இனங்கண்டு, சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதிலும் நிறைவேற்றுத் தரத்தில் அல்லாத பொறுப்புக்கள் அதனைச் சாரும்.

### நடத்தை மற்றும் விழுமியங்கள் குழு

குழுமமத்தின் வியாபாரம் பொறுப்புணர்வுடனும் HSBC விழுமியங்களுக்கு அமைவாகவும் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் தராதரங்களுக்கு இக் குழு பொறுப்பாக இருக்கின்றது. குழுமம் தனது வியாபார நடவடிக்கைகளின்போது வாடிக்கையாளர்களை நியாயமாகவும் வெளிப்படையாகவும் நடத்துதல், சரியான வாடிக்கையாளர்களுக்குச் சரியான வழி என்ற முறையில் வியாபாரத்தை மேற்கொள்ளுதல், பொறுப்பு வாய்ந்த தொழில் வழங்குநராக விளங்குதல், தான் செயற்படும் பிரதேசங்களிலுள்ள சமூகங்கள் தொடர்பில் பொறுப்புணர்வுடன் செயற்படுதல், சகல பங்காளிகளையும் நியாயமாக நடத்துதல் என்பவற்றையும் இக் குழு உறுதிப்படுத்துகின்றது.

### உள்ளகக் கட்டுப்பாடு

இடர் முகாமை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்புக்களின் செயற்திறனைப் பேணுதல் மற்றும் மீளாய்வு செய்தல், மூலோபாயக் குறிக்கோள்களை அடைவதற்கு எத்தகைய மற்றும் எந்த அளவுக்கு இடர்களை ஏற்க முடியும் என்பதைத் தீர்மானித்தல் ஆகியவற்றிற்குப் பணிப்பாளர்கள் பொறுப்பாக இருப்பார்கள்.

இத் தேவையை நிறைவேற்றுவதற்கும் FCA கைந்நூல் மற்றும் PRA கைந்நூலின் கீழான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. சொத்துக்களின் அதிகாரமற்ற பாவனை அல்லது விற்பனையைத் தடுப்பதற்கும், சரியான கணக்குப் பதிவேடுகளைப் பேணுவதற்கும், வியாபார அமைப்பிற்குள் பயன்படுத்தப்படும் அல்லது பிரசுரிக்கப்படும் நிதித் தகவல்களின் நம்பகத்தன்மை மற்றும் பயன்நிறைவை உறுதிப்படுத்துவதற்கும் வழிகோலுவதே இந்த நடைமுறைகளின் நோக்கமாகும். விடயங்களின் பிழையான அறிக்கையிடல், தவறுகள், இழப்புக்கள் அல்லது மோசடிகளைத் தவிர்ப்பதற்கு நியாயமான அளவு (ஆனால், பூரணமாக அல்ல) உத்தரவாதத்தை இந்த நடைமுறைகள் வழங்குகின்றன.

### நிதி அறிக்கையிடல்

2015ஆம் ஆண்டின் ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கை மற்றும் கணக்குகளின் தயாரிப்புக்காக குழும நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் அறிக்கையிடல் நடைமுறையானது, ஆவணப்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் அறிக்கையிடல் படிமங்களையும் அவற்றிற்குப் பக்கபலமாக, அறிக்கையிடல் தேவைகள் பற்றிய விரிவான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டுதல்களையும் கொண்ட கணக்கு அட்டவணையையும் பயன்படுத்திக் கட்டுப்படுத்தப்பட்டன. இந்த அட்டவணையானது ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவுக்கும் முன்பதாக, குழுமத்திலுள்ள சகல அறிக்கையிடல் பிரிவுகளுக்கும் குழும நிதிப் பிரிவினால் விநியோகிக்கப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடல் பிரிவினாலும் குழும நிதிப் பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்படும் நிதித் தகவல்கள், சம்பந்தப்பட்ட நிதி அதிகாரியின் மூலமும் அறிக்கையிடல் பிரிவு மற்றும் குழும மட்டங்களில் மேற்கொள்ளப்படும் விரிவான மீளாய்வு நடைமுறைகளின் மூலமும் அத்தாட்சிப்படுத்தப்படுவது அவசியமாகும்.

### வெளிப்படுத்துகைக் குழு

ஏதேனும் தவறுகள், பிழையான அறிக்கையிடல்கள் அல்லது விடுபடுகைகள் தொடர்பில் HSBC ஹோல்டிங்ஸினால் பகிரங்கமாக வெளிப்படுத்தப்படும் விடயங்களை வெளிப்படுத்துகைக் குழு மீளாய்வு செய்கிறது. குழுமத்தின் கம்பனிச் செயலாளர் தலைமையிலான இக் குழுவில் உலகளாவிய நிதிப் பிரிவு, சட்டப் பிரிவு, இடர் முகாமைப் பிரிவு, தொடர்பாடல்கள் பிரிவு, முதலீட்டாளர் உறவுகள் பிரிவு என்பவற்றின் தலைவர்களும் அங்கம் வகிக்கின்றனர். வெளிப்படுத்தல்களின் நம்பகத்தன்மையானது உலகளாவிய நிதி மற்றும் உலகளாவிய இடர் முகாமைச் செயற்பாடுகளின் கட்டமைப்புக்கள் மற்றும் நடைமுறைகளினால் உறுதி செய்யப்படுகின்றன. நிதி அறிக்கையிடலின் நிபுணத்துவமான மற்றும் கண்டிப்பான பகுப்பாய்வு, உலகளாவிய வியாபாரம், உலகளாவிய செயற்பாடுகள் மற்றும் சில சட்டத்துறை நிறுவனத் தலைவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மீளாய்வுகள் என்பன இதற்கு ஆதாரமாக இருக்கின்றன.

ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட் ஆனது இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும்.
ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்- ஸ்ரீ லங்கா வெளியீடு.

| | | ∴பிச் | | மூடிஸ் | | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தரமதிப்பு | எதிர்காலம் | தரமதிப்ப | எதிர்காலம் | தரமதிப்ப | எதிர்காலம் |
| ர்ளுடீஊ ஹோல்டிங்ஸ் பி.எல்.சி | நீண்டகால/சிரேஷ்ட | AA- | உறுதி | A1 | உறுதி | AA- | உறுதி |
| | குறுகியகால | F1+ | | P-1 | | A-1 | |

HSBC